பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 29 திங்கட்கிழமை (13-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 48

## ஒய்வெடுக்க சிறிமாவோ இந்தியாவுக்கு

கொழும்பு, ஜன. 13

எதிர்க்கட்சித் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரு மாத காலம் இந்தியாவில் ஓய்வு எடுப்பார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதற்காக விரைவில் இந்தியாவுக்கு அவர் செல்ல விருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (த-எ)

## முச்சந்தி முரளி



அம்மணி அங்காலை ஓய்விலை போக, மகன் அணி இங்காலை அவவுக்கு நிரந்தர ஓய்வு குடுத்திடும்......!

# லலித், காமினி குழுவினருக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா மற்றும் ஆறு எம். பிக்களின் முன்னைய நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க விசேட ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

அரசாங்கத்தின் உயர்நிலைத் தலைவர்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மேற்படி எட்டுப் பேரினதும் கடந்த கால நடவடிக்கைகளை விசாரணை செய்து அதனடிப்படையில் அவர்களின் குடியுரிமையை ஏழாண்டுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு ரத்துச் செய்ய வேண்டுமா என்பது குறித்து பரிந்துரை வழங்குமாறு உத்தேச ஜனாதிபதி ஆணைக்குழு கேட்கப்படும்.

அரசமைப்பின் 81 ஆம் பிரிவு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வகை செய்கிறது.

ஆனாலும்—

குடியுரிமையை ரத்துச் செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை ஆணைக்குழு வழங்கினாலும் நாடாளுமன்றத்தில் உள்ள எம். பிக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அங்கீகரித்தால் மட்டுமே அதனை அமுல் செய்ய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 13

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 3 மணியளவில் குருநகர் கடற்கரைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவிலும் அந்தப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல்களினால் அப்பகுதி மக்கள் பீதியடைந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். [உ-3]

## 3 தமிழர் காயம்

யாழ்ப்பாணம், ஜன 13

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கணேசபுரம், கைமுந்தான், செட்டியாவெளி ஆகிய பகுதிகளை சுற்றி வளைத்த படையினர் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று தமிழ் மக்கள் காயமடைந்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துக்குமார் கந்தசாமி [33 வயது] என்பவர் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# ★ இனப்பிரச்சினை தீர்வுக்கு யோசனை சமர்ப்பிப்பதற்கு ஐ. தே. க., சு. க. பின்னடிப்பு

## பேரினவாத கிளர்ச்சிக்கு சிங்களக் கட்சிகள் சரண்

கொழும்பு, ஜனவரி 13

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சொந்த யோசனையை முன்வைக்கும் விடயத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும், பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பின் நிற்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் தொண்டமான் வெளியிட்டிருக்கும் யோசனையை அடுத்து தெற்கில் எழுந்திருக்கும் சிங்களப் பேரினவாத கிளர்வுக்கு மத்தியில், சொந்த யோசனையை தாமும் முன்வைத்து, சிக்கலில் மாட்டிக் கொள்ள அக்கட்சிகள் விரும்பவில்லை என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான யோசனையை சிபாரிசு செய்ய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவிடம் கட்சிகள், அமைப்புகள், தனிநபர்கள் உட்பட பல்வேறு தரப்புகளிடமிருந்து இருநூறுக்கும் அதிகமான

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் மூளாயில்! ஒருவர் காயம்; வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 13

நேற்று அதிகாலை பலாலி இராணுவ முகாம் பக்கத்திலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் மூளாய் தெற்குப் பகுதியில் மக்கள் குடியிருப்புகளுக்கு இடையே விழுந்து வெடித்தன. இதனால் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஷெல்கள் விழுந்து வெடித்த போது பீதியால் வீட்டை விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருந்த ரி. திருநாவுக்கரசு [வயது 55] என்பவரே ஷெல் சிதறல்களால் முதுகில் காயமடைந்தார்.

அப்பகுதியில் வீடுகள் பலவும் சேதமடைந்தன. [உ-5]

## பொன்னாலையில் நேற்று விமானக் குண்டு வீச்சு!

பொன்னாலைப் பகுதியில் நேற்றுக் காலை இரு தடவைகள் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்கள் அப்பகுதியின் மேல் நீண்ட நேரம் வட்டமிட்டுப் பின் அடுத்தடுத்து ஐந்து குண்டுகளை வீசின.

பொன்னாலை பெரியார் கோவிலுக்கும் பொன்னாலைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் மூன்று குண்டுகள் விழுந்து வெடித்தன. இரு குண்டுகள் கடற் பகுதிக்குள் விழுந்தன.

பின்னர் முற்பகல் 9 மணியளவில் வந்த பொம்மர் ஒன்று அதே பகுதியில் இரண்டு குண்டுகளை வீசியது.

இருவேறு தடவைகள் இடம்பெற்ற தாக்குதல்களினாலும் அப்பகுதியில் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-5-28]

## பூநகரியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 13

பூநகரி மட்டுவில்நாடு பகுதியில் தரித்து நின்ற படையினர் மீது நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் 'அருள் 89' தாக்குதலை நடத்தியதாகவும் —

இத்தாக்குதலில் படையினருக்கு சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி படையினர் ஷெல் மற்றும் கலிபர் தாக்குதல்களை நடத்தினர்.

இதேவேளை மட்டுவில்நாடு மேற்கு உதவி அரச அதிபர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முகாம்களின் பாதுகாப்பை அதிகரிக்கும்படி பணிப்பு!

கொழும்பு, ஜன. 13

வடக்கு-கிழக்கில் உள்ள ஆயுதப் படை மற்றும் பந்தோபஸ்து நிலைகளில் ஆகக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூட்டுப்படைகள் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

பொன்னாலைப் பாலத்தில் உள்ள படையினரின் காவலரண்கள் தகர்க்கப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## அகதிகள் நிவாரண மோசடி மட்டக்களப்பில் 5பேர் கைது

கொழும்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்ட அகதிகள் நிவாரண விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக உதவி அரச அதிபர், கூட்டுறவுச்சங்க முகாமையாளர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மோசடி செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன. [த-எ]

## தொண்டாவின் அறிவிப்புக்கு மல்வத்த தேரர் மறுப்பு!

கொழும்பு, ஜன. 13

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது யோசனைகளை மல்வத்த பீடாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்று அமைச்சர் தொண்டமான் விடுத்த அறிவிப்பு பொறுப்பற்ற ஒரு செயலாகும்.

— இப்படி மல்வத்த பீடாதிபதி கண்டித்திருக்கிறார்.

மல்வத்த மகாநாயக்க தேரர் வண. ரம்புக்வெவ ஸ்ரீ விபஸ்ஸி தேரரை அமைச்சர் தொண்டமான் கடந்த 2 ஆம் திகதி சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் திரு. தொண்டமான் அறிக்கை ஒன்றை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த அறிக்கையில் —

தமது யோசனைகளை முன்னர் நிராகரித்த மல்வத்த மகாநாயக்க தேரர், தாம் சந்தித்து விளக்கிய பின்னர் அந்த யோசனைகளின் முக்கியத்துவம் பற்றி உணர்ந்து அவற்றை ஏற்றுக்கொண்டார் என்று திரு. தொண்டமான் தெரிவித்திருந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீபிகா, போலிங்கிற்கு தேசிய அணியில் இடமில்லை

### 'ஒலிம்பிக்' வாய்ப்பு மறுப்பு

கொழும்பு, ஜன. 13

இவ்வருடம் ஸ்பெயினின் பார்ஸிலோனா நகரில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றச் செல்லும் ஸ்ரீலங்கா அணியில் தமிழர்களான நீச்சல் வீரர் ஜூலியன் போலிங், நீச்சல் வீராங்கனை தீபிகா சண்முகம் ஆகிய இருவருக்கும் இடமில்லை. ஆனால் ஸ்ரீலங்கா அணியில் அங்கம் வகிப்போர் குழுமத்தில் [Pool] வேறு பதினொரு வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மெய்வல்லுனர் வீரர்களான கே. ஏ. கருணாரட்ண. சிறியந்தா திஸநாயக்கா, சிறியானி கழுவன்ஸ தம்மிகா மெனிக்கா, தமயந்தி தர்ஷா, ரஞ்சித் சுபசிங்க ஆகியோரும் அஸ்ல விஜயவிக்ரம [பாரம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ரஞ்சன் கொலை: சந்தேகநபர் கைதாம்!

கொழும்பு, ஜன. 13

ஊவா மாகாணத்தில் கைது செய்யப்பட்ட 150 சந்தேக நபர்களில் கண்ணன் என்ற விஞ்ஞானப் பட்டதாரியும் ஒருவர் என்று பொலீஸார் கூறினர்.

இவர் முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, மட்டுநகர் முன்னாள் எம்.பி. சாம் தம்பிமுத்து ஆகியோரின் கொலைகளில் சம்பந்தப் பட்டவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

# இனப்பிரச்சினை: மத்தியஸ்தம் செய்ய அமெ. நிறுவனத்திடம் கோரிக்கை

நியுயோர்க், ஜன. 13

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்யுமாறு அமெரிக்காவில் உள்ள ஜனாதிபதி கார்ட்டர் நிறுவனத்தை அங்குள்ள இலங்கைத் தமிழர் சங்கம் கே[illegible] சுயேச்சையான—அரச சார்பற்ற— ஜனாதிபதி கார்ட்டர் நிறுவனத்துக்கு அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர் சங்கம் விவரமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தின் சாரம் [illegible] ஜனாதிபதி கார்ட்டர் நிறுவனத்திடம் சங்கம் முறையிடுவது குறித்து இலங்கையில் சண்டையிடும் தரப்புகள் எதனிடம் இருந்தும் சங்கம் அங்கீகாரம் பெறவில்லை.

யுத்தம் செய்யும் இரு இனங்களில் ஒன்றிலிருந்து மட்டுமே திரட்டப்பட்டவர்களைக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பாதுகாப்பு துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். நஷனல் பாதுகாப்புத் திட்டம், 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [19311]

### பாடப் பதிவேடு

பாடப்பதிவேடு ஆண்டு 1—5 ரூபா 25/-, ஆண்டு 6 — 11 ரூபா 15/-. மிகக் குறைந்த அளவு பிரதிகளே உண்டு. இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், [சி/1275]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### ஆசிரியர் பயிற்சி

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்: 15-1-1992 ஒரு வருட பயிற்சி. O/L பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்கள் கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம். [சி/1322]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினைக்கு உரிய பதில் கிடைக்கும். ஜாதகம், குறிப்பு, எண் சோதிடம், கைரேகை, விவாகப் பொருத்தம் அனைத்திற்கும் தொடர்பு; த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (19260)

### புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம். இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது. (19270)

### வரலாறு

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு-ஆண்டு 11, வரலாறு-ஆண்டு 6 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் [சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்] [19244]

### A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L மாணவர்களுக்கான அடிப்படைக் கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டன. ஆக்கியோன்; N. ராஜன், B. Com. யாழ் நகரில் சகல புத்தகசாலைகளிலும், சுன்னாகத்தில் துர்க்கா ஸ்ரேசனறியிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை 25/-. (சி/1268)

### இலக்கியப் பரிசு

1989 ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நூல், அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய முதலாம் பிள்ளை ரூபா 30. 10 வானொலி நாடகங்கள், ஒரு கட்டுரை. [19219]

### O/L கணிதம்

92, 93 ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்குக் கணிதம் கற்பிக்கப்படும். ஆசிரியர், B. Sc. 85, சிவன் கோவிலடி, திரு. நெல்வேலி. (4500)

### வெளிவந்து விட்டது

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ. த. [9 வருடம்] வினாவிடை வெளிவந்து விட்டன. பெற்றுக் கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி, சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1285]

### நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/1276)

---

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கையில்

★ உங்கள் மனைப் பொருள்களையும்
★ அன்றாட பாவனைப் பொருள்களையும்

ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள:

## ★ நியாய விலைச் சந்தை ★

சுண்டிக்குளி.

நிகர எடை, நிதான விலை,
தரமான பொருள்

இவை அனைத்திற்கும்

## நியாய விலைச் சந்தை

சுண்டிக்குளி.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்.

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்.

(19316)

---

## டிப்ளோமா மனையியலும், கைத்திறனும்

## Diploma In Home Science & Craft

★ சித்திரக் கலை
[சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

★ வர்ணந் தீட்டுதல்
[துணியிலும், கண்ணாடியிலும், இசைத்தட்டுகளிலும்]

★ கை வேலை
[மக்றமி, நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், வைக்கோல் வேலை, வாழைநார் வேலை, கம்பளி நூல்-வேலைப்பாடுகள்]

★ பூ வேலை
(கடதாசியினாலும், துணியினாலும் மலர்கள் செய்தல்)

★ தையற் கலை
(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகல விதமான ஆடைகளும் தயாரித்தல், பூ வேலைப்பாடுகள் செய்தல்)

★ சமையற் கலை
(கீழைத்தேய, மேலைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம், புடிங் வகைகள் மற்றும் உள்ளூர் மூல வளங்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்)

★ கூந்தல் அலங்காரம்
(கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், - மணப்பெண்ணுக்கான அலங்காரங்கள் செய்வித்தல்)

★ கேக் ஐசிங்

## பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

- பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட **Diploma in Home Science & Craft** தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை **9-00** முதல் பிற்பகல் **1-00** மணி வரை நடைபெறும்.
- தொழில் புரிவோர், இல்லத்தரசிகள் நலன் கருதி சனி, ஞாயிறு தினங்களில் காலை **9-00** முதல் பிற்பகல் **3-30** மணி வரையும் பயிற்சிகள் நடைபெறும்.

| | |
|---|---|
| புதிய சனி - ஞாயிறு பிரிவுகள் | ஆரம்பம்: 19-01-1992 |
| புதிய கிழமை நாள் பிரிவுகள் | ஆரம்பம்: 20-01-1992 |

## இசை நடன வகுப்புகள்

★ சங்கீதம் ★ வீணை ★ மிருதங்கம்
★ பரத நாட்டியம் ★ வயலின் ★ புல்லாங்குழல்

○ மேற்படி வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகும். வீணை வகுப்பு சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும்.

**புதிய வகுப்புகள் ஆரம்பம்: 20-01-1992**
(தைப்பூசத் தினத்தன்று)

# கலாலயா

(அழகியற் கலைக்கல்லூரி)
விக்டோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்) [சி-1277]

---

## கண்ணீர் அஞ்சலி

நடனகலாமணி திருமதி
**கனகேஸ்வரி மயில்வாகனம்**
[நடன விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்]

உதயம்: **21 - 02 - 1940** மறைவு: **05 - 01 - 1992**

அன்புச் சகோதரியே! ஆருயிரே! எங்களுடன்
என்றும் பிரியா திருந்து மறைந்தனையே
அன்பால், அறிவால், அடக்கத்தால், பண்பால் - உன்
பொன் போலும் ஆடற்கலையாற் பொலிந்தனையே
ஆசிரிய கலாசாலைக்கு அணியாய்த் திகழ்ந்தவளே
பேசரிய பெண்பாவாய் பேசாமற் சென்றனையோ
நேசம் மறக்காமல் நெஞ்சம் குமுறுதம்மா
ஈசனடி சேர்ந்து இன்புற்றிருந்திடுக.

அதிபர், விரிவுரையாளர்கள்.
ஆசிரிய கலாசாலை,
கோப்பாய். [19320]

---

## இதோ! உங்களை அழைக்கின்றது!
## நெல்லியடியில் ஓர் புதிய உதயம்

# நியாய விலைக் கடை

[வங்கி அருகில்]

உங்களுக்குத் தேவையான-
**சகல மனைப் பொருள்களையும், ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

**பாடசாலை மாணவ, மாணவிகளே!**

உங்களுக்குத் தேவையான-
சகல பாடசாலை உபகரணங்களையும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும்,
நியாய விலையில் பெற்றுக்கொள்ள;

**நியாய விலைக் கடை,**
நெல்லியடி.

நெல் கொள்வனவு செய்ய விரும்புவோர் மற்றும் உபதானிய வகைகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

**நியாய விலைக் கடை,**
நெல்லியடி.

வாருங்கள்! வருகை தந்து பாருங்கள்!!

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்.

விளம்பர அமைப்பு;
(19315) செனித் ஜோ. எகட்டன்.

---

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**(சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)**

## 1992 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி
## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134, 146 ஆம் பிரிவுகளின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நெல் வயல்கள் தவிர்ந்த அசைவற்ற ஆதனங்களது வருடாந்த மதிப்பீட்டின்படி 1991 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட விகிதத்தில் 1992 ஆம் ஆண்டிற்கும் ஆதனவரி செலுத்தப்படல் வேண்டுமென வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட விகித வரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாயத் தவணைகளில் 1992 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

1992 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால், ஒரு 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன், விகிதம் வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் ஒரு 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து, வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலும் மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுயான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலி. தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 7-1-92. [சி/1286]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நோக்கம் அதுவே!

மலையகப் பகுதியில் பதற்ற நிலை உருவாகும் அறிகுறிகள் மெதுமெதுவாகத் தென்படத் தொடங்குகின்றன. அதற்கான பின்னணி திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகிறது என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்!

மலையகத் தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுகிறார்கள். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி அப்பாவிகள் எல்லாம் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களை விடுவிக்குமாறு மலையகத் தமிழரை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்டுக்கொண்டபோதிலும் பொலிசார் அதற்கு உடன்படுவதாக இல்லை.

மேலும் மலையகத்தில் கொள்ளைகளும், கொலைகளும் ஆரம்பமாகியுள்ளன. அவை குறித்து எந்தவித விசாரணையும் நடக்கு முன்னரே, நடத்து முன்னரே விடுதலைப் புலிகளே இவற்றைச் செய்திருக்க வேண்டும் என்று எவ்வித ஆராய்வும் இன்றி பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகிறார்கள்!

ஒரு சம்பவம் நடந்தால், வன்செயல் நடந்தால் அது நடந்த அரைமணி நேரத்துக்குள் — போதிய விசாரணைகள் நடக்கு முன்னர் — விடுதலைப் புலிகள் தான் அதனைச் செய்தார்கள் என்று எவ்வாறு சொல்ல முடியும்? எங்கே ஒரு சம்பவம் நடக்கும், அதனைப் புலிகள் தலையில் சுமத்துவோம் என்று காத்திருப்பது போலவே, பாதுகாப்புப் படையினர் நடந்து கொள்கின்றனர்.

பாதுகாப்பு வட்டாரங்களின் இந்தப் போக்கு, மலையகத்தில் ஒரு பதற்ற நிலை உருவாகுவதாக அல்லது உருவாக்கிக் காட்டும் திட்டமே என்று எண்ண வேண்டியுள்ளது. மலையகத்தில் பதற்றத்தை உருவாக்கி அங்குள்ள தமிழர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதே உள்ளார்ந்த நோக்கம்.

வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்முயற்சி எடுத்துவரும் அமைச்சர் தொண்டமானை முடக்கி மூலைக்குள் தள்ளிவிடும் நோக்கத்துடனும் மலையகத்தில் பதற்ற நிலை உருவாக்கப்படுகிறது என்று சில சாரார் கருதுகிறார்கள்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதில் அக்கறையாக உள்ள சிங்களப் பேரினவாதமும், அதில் ஊறிவிட்ட படைகளும் தொண்டமான் விவகாரத்தை ஒரு தற்காலிக இலக்காகக் கொள்வதற்கான சாத்தியம் இல்லை என்று முற்றாக நிராகரித்துவிட முடியாது.

ஆனால்—

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த ஆரம்பத்தில் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி இரண்டாந்தரப் பிரசைகளாக்குவதற்குத் தொடங்கப்பட்ட முதலாவது பேரினவாத நடவடிக்கை மலையகத் தமிழருக்கு குடியுரிமை, வாக்குரிமை மறுக்கப்பட்டதே என்பதை மறந்துவிடலாகாது. எனினும் இப்போது காலத்தின் நிர்பந்தத்தால் அவர்களின் அவ்வுரிமைகள் கிடைத்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மலையகத்தில் ஊடுருவிவிட்டார்கள் என்று கூறிக்கொண்டு, வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்களை மலையகத்திலும் அறிமுகப்படுத்த படையினர் விரும்புகின்றனர். அதற்கான அத்திவாரத்தைப் போடும் நிரந்தர- நீண்ட நாள்-திட்டமே இப்போதைய ஆட்டம்.

## தாராளமாக பொருள்கள் நிர்ணய விலையில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். வர்த்தகத் திணைக்களக் கிளைகளில் உணவுப் பொருள்கள் கட்டுப்பாடின்றி சகலருக்கும் நிர்ணய விலையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் அரிசி, மா, சீனி, பருப்பு உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் இந்தக் கிளைகள் மூலம் பங்கீட்டு அடிப்படையிலேயே நிர்ணய விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

தற்சமயம் பங்கீட்டு அட்டையின்றியும் பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் — செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மக்கள் வாங்க முடியும் என்று வர்த்தகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-3]

## திருமலைத் தமிழர் விரட்டப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 13

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்களைத் தாக்கி விரட்டியடிக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பு மேற்கு, கொலனிப்பிட்டி மேடு, நாயன்மார் திடல், குஞ்சப்பைத்திடல், கல்லிரவை ஆகிய தமிழ்க்கிராமங்களை சுற்றி வளைத்த படையினர் மக்களைக் கைது செய்து துன்புறுத்தி, விரட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்படி விரட்டப்பட்ட சுமார் அறுநூறு தமிழர்கள் உணவு, இருப்பிட வசதியின்றி தம்பலகமம் பகுதியில் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மக்கள் இயக்கம் நடத்த தி.மு.க. முன்னறிவிப்பு

சென்னை, ஜன. 13

பயங்கரவாத தடுப்புச் [தடா] சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் பழிவாங்கல் நடவடிக்கையை மாநில அரசு நிறுத்தாத பட்சத்தில் பெரும் மக்கள் இயக்கம் ஒன்றை நடத்தப் போவதாக தி.மு.க. அறிவித்திருக்கிறது.

முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான திரு. மு. கருணாநிதி நேற்று இதனை அறிவித்தார்.

தி.மு.க. செயற்குழுவின் அவசரக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதன் முடிவில் கருணாநிதி இந்த அறிவிப்பை விடுத்தார்.

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள தி.மு.க. வினரை உடனடியாக மாநில அரசு விடுதலை செய்ய வேண்டும் என்றும் கருணாநிதி தெரிவித்தார். [உ-எ]

## அரபாத் இம்மாதம் கொழும்பு வருவார்

கொழும்பு, ஜன. 13

பாலஸ்தின விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இம்மாதம் 23 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் ஜனாதிபதி பிரேமதாஸவை நேரில் சந்தித்து அவருக்கு நன்றி தெரிவிப்பதற்காகவே அரபாத் இங்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-10]

## அமெரிக்க ராணுவ உதவி பெற இந்தியா முயற்சி!

புதுடில்லி, ஜன. 13

சோவியத் யூனியனின் மறைவையடுத்து அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவிகளைப் பெறுவதற்கு இந்தியா முயற்சித்து வருவதாக புதுடில்லியில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய இராணுவ வீரர்கள் அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதிலும்—

அமெரிக்காவிடமிருந்து இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதிலும் இந்திய அரசு தீவிரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஆயுதப் படையின் பசுபிக் பிராந்தியத் தளபதி இம்மாதம் 24 ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்கின்றார்.

அவ்வேளை அமெரிக்காவிடமிருந்து இந்தியா பெறவுள்ள இராணுவ உதவிகள் குறித்து அவருடன் இந்திய இராணுவ அதிகாரிகள் பேச்சுகள் நடத்துவார்கள் என்றும் புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

(உ-எ)

## பெரியபுலத்தில் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இன்று முதல் வழமைபோல் வகுப்புகள் நடைபெறும் என அதிபர் அறிவித்திருக்கிறார்.

வித்தியாலயத்தில் தங்கியிருந்த — இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு—மாற்று இட வசதிகள் செய் [illegible] பட்டது.

## ஆரியரத்தினாவுக்கு எதிர்ப்பு வலுக்கின்றது

கொழும்பு, ஜன. 13

சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தினாவின் சுயசரிதையை எழுதியவரும் அந்த இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினருமான திரு. குணதாஸ லியனகே அந்த இயக்கத்திலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. ஆரியரத்தினா அரசியலில் பிரவேசிக்க எடுத்த முடிவை எதிர்த்தே திரு. லியனகே பதவி விலகினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக அரசியலில் ஈடுபட முயற்சித்து வந்த திரு. ஆரியரத்தினா தனது நோக்கம் பற்றி வெளிப்படையாகத் தெரிவித்ததன் மூலம் தமது உண்மையான நிறத்தைக் காட்டி விட்டார் என்று திரு. லியனகே தமது ராஜினாமாக் கடிதத்தில் கூறியுள்ளார்.

ஆரியரத்தினா பற்றிய சரிதை நூல் உட்பட தாம் எழுதிய சர்வோதய இயக்கம் சம்பந்தமான எந்த நூலையும் விற்பனைக்கு விடக்கூடாது என்றும் சர்வோதய தலைவரை அவர் கேட்டுள்ளார்.

''நான் ஊக்குவித்த ஆரியரத்தினா இப்போது இல்லை. அவர் இப்போது முற்றிலும் மாறியுள்ளார்'' — என்றும் திரு. லியனகே தெரிவித்தார்.

[த-எ]

### தீபிகா...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தூக்குதல்], ஆர். பி. ராமநாயக்கா, ஸி. விக்கிரமசிங்க [குறிபார்த்துச் சுடுதல்], லிகினி வீரசூரிய [டென்னிஸ்] ஆகியோரின் பெயர்களே ஒலிம்பிக் வீரர்கள் குழுமத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இந்தக் குழுமத்தில் அங்கம் பெறுபவர்களில் இருந்து ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

தெற்காசிய விளையாட்டுகளில் மொத்தமாக 12 சாதனைகளை நிலைநாட்டிய தீபிகா சண்முகம், ஜுலியன் போலிங் ஆகியோருக்கு இடம் வழங்காமல்—

தேசிய மட்டத்தில் கூட சாதனைகளை எட்டாத வீரர்களுக்கு இடமளித்திருப்பது குறித்து விளையாட்டுத்துறை அவதானிகள் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

[உ-3-5]

### யோசனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் பிரதான கட்சிகளான ஐ.தே. கவும், சு.கவும் இதுவரை தீர்வுகான திட்டம் எதையும் வெளியிடவில்லை.

தெற்கில் கிளர்ந்திருக்கும் சிங்களப் பேரினவாத எழுச்சிக்கு மத்தியில் —

தமிழருக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் யோசனை எதனையாவது வெளியிட்டு அதன் மூலம் சிங்கள மக்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள இக்கட்சிகள் விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கான யோசனையைத் தயாரிப்பதற்கு கட்சியின் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக இரு கட்சிகளும் அறிவித்துள்ளன. ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வில் தங்களுக்கு அக்கறை இருப்பதாக வெளியுலகுக்கு காட்டிக் கொள்ளும் கண்துடைப்பு நடவடிக்கையே அந்த அறிவிப்பு என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் நிலை குறித்து அக்கட்சி எம்.பியான நிமால் சிறிபால டி சில்வாவிடம் கேட்டபோது —

எமது கட்சி தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதால் குழுவுக்கு கிடைக்கும் யோசனைகளைப் பரிசீலனை செய்து குழு இறுதியில் எடுக்கும் முடிவை நாடாளுமன்ற விவாதத்துக்கு எடுத்துச் செல்ல முடியும் — என்றார்.

இதற்கிடையில் —

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த யோசனையை எந்தக் கட்சியும் உத்தியோக பூர்வமாக நிராகரிக்கவில்லை என்பதையும் கொழும்புச் செய்திகள் சுட்டிக் காட்டின.

[உ-3-10]

## ஆட்சேபித்து மேன்முறையீடு

சென்னை, ஜன. 13

பயங்கரவாதத் தடுப்பு (தடா) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் வீரசேகரனை சென்னை உயர் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்ததை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் முறையீடு செய்ய மாநில அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாடு மாநில சட்ட அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி இத்தகவலை வெளியிட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்படி கைதானவர்களைப் பிணையில் விடுதலை செய்ய உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்றும்—

சிறப்பு நீதிமன்றத்திற்கும், சுப்ரீம் கோர்ட்டிற்கும் மட்டுமே இதற்கான அதிகாரம் உண்டு என்றும் திரு. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

(த-எ)

### இனப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுள்ள அரச ஆயுதப் படையினர் மற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் மீது அவர்கள் போராளிகளா இல்லையா என்று பார்க்காது தாக்குதல் நடத்துகின்றனர்.

அரச படையினரால் கொல்லப்பட்டவர்களில் 90 சதவீதத்திற்கு அதிகமானோர் யுத்தத்தில் சம்பந்தப்படாத குடிமக்களாவார்.

1987 இல் இந்திய அரசு தலையிட்டது. மத்தியஸ்தராக இன்றி தனது சொந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் இந்தியா தலையிட்டதனால் அதன் முயற்சி தோல்வி அடைந்தது.

இந்தியாவின் பிராந்திய பாதுகாப்புப் பற்றியே 1987 ஒப்பந்தத்தில் பிரதானமாக குறிப்பிடப்பட்டிருந்த இந்த உண்மையை வெளிப்படுத்தியது. ஒப்பந்தத்தில் தமிழர் பிரச்சினை முக்கியத்துவம் பெறவில்லை.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு முறை வருவதை இந்தியா விரும்பவில்லை.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்ய குறிப்பாக ஆஸ்திரேலியா, கனடா, நோர்வே உட்பட சில நாடுகளின் அரசாங்கங்கள் முன்வந்தன. அவற்றின் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அரசாங்கங்களிலும் பார்க்க சுதந்திரமான அரச சார்பற்ற ஜனாதிபதி கார்ட்டர் நிறுவனம் போன்ற அமைப்புகள் தான் மத்தியஸ்தம் செய்ய உகந்தவை என்று சங்கம் நம்புகின்றது.

ஆகவே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதன் மூலம் உயிரிழப்பு மற்றும் அழிவுகளைத் தவிர்க்க, அர்த்தமுள்ள விதத்தில் தலையிடும்படி ஜனாதிபதி கார்ட்டர் நிறுவனத்தை எமது சங்கம் கேட்டுக்கொள்கிறது— என்பதாகும்.

இக்கடிதம் 12-1-1992 ஆம் திகதிய ''ஹொற் ஸ்பிறிங்'' வார இதழில் வெளியிடப்பட்டுள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகம்மா பொன்னையா

அரியாலையைச் சேர்ந்த திருமதி யோகம்மா பொன்னையா 12-01-1992ல் இறைபதம் எய்தினார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் பொன்னையா [தபாலதிபர் G.P.O] வின் அன்பு மனைவியும், உமாமகேஸ்வரி, காலஞ்சென்ற சிவயோகிஸ்வரன் மற்றும் வரதலெட்சுமி [உப்புக் கூட்டுத்தாபனம்], யோகானந்தன் [மகாவலி அபிவிருத்திச்சபை], திருலோசனி, கணேசானந்தன் [U. K], திரிபுரச்சந்திரன், பத்மலோசனி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகாதேவி, வைற்றஸ் [உப்புக் கூட்டுத் தாபனம்], இராஜலட்சுமி, குமாரதியானம், ஜமுனாதேவி, கலாதேவி, மகேந்திரராசா [U. K.] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று [13 - 01 - 1992] காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப் பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: **பொ. யோகானந்தன்.**
புறாடி ஒழுங்கை,
அரியாலை. [19323[

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்துரை [12-01-1992] இல் காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், இராஜரட்ணம் [சிங்கப்பூர்], இராஜேஸ்வரி [சிங்கப்பூர்], காலஞ்சென்ற அரசரட்ணம், பரமேஸ்வரி, விஜயரட்ணம், காலஞ்சென்ற தனரட்ணம், நாகேஸ்வரி [U. K], விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி காந்தா, சிவசம்பு, மகேஸ்வரி, சண்முகம், நிர்மலா, திலகராணி, கணேசநாதன், தியாகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும். கேளி, பிறேமா, லில்லி, ரவி, அரவிந்தன், அஜந்தா, பிரபா, பிரகலாதன், தீபன், மாலா, றஜீவன், தனுசிஜா, விரோசினி, ஜனன், செந்தூரன், கண்ணன், சங்கீதா, துவாரகா ஆகியோரின் பேரனும், டினேஸ், டிராஜ் ஆகியோரின் பாட்டனாரும் ஆவர்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: **திருமதி சின்னத்துரை**
மலாயன் பலேஸ்,
கணேஸ்வரம்.
அளவெட்டி வடக்கு. [19328]

## E. M. கந்தையா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அகங்கமம் பிரபல வர்த்தகர் இ. மு. கந்தையா 12-1-19இல் காலமானார். இவர் காலஞ்சென்ற பரிபூரணத்தின் அன்புக் கணவரும், திரு. திருமதி முத்தரின் அருமை மகனும், திருமதி செல்லத்துரை, திருமதி செல்லையா, திருமதி நடராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும், அன்னலட்சுமி, சுந்தரலிங்கம் [முன்னாள் பிரபல வர்த்தகர், அகங்கமம்], மங்களேஸ்வரி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சங்கரப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர்], பரமேஸ்வரி, வேலும்மயிலும் [இளைப்பாறிய கிராம சேவையாளர்] ஆகியோரின் அருமை மாமனாரும், அருள் வரதன் [Charted Accountant, India], திருமதி அருள்மதி சண்முககுமார் [ஆசிரியர், அ.மி.த.க. பாடசாலை], அருள்நிதி [விவசாயக் கல்லூரி, வவுனியா], பராபரன் [மேற்கு ஜேர்மனி], பரிபூரணகலா, சத்தியநாதன், கருணாகரன், கிருஷ்ணப்பிரியா, யோகேஸ்வரன் [மேற்கு ஜேர்மனி], லதாவாணி[B.Com], சிவாஜினி, சிவலோஜினி, வதனி ஆகியோரின் அன்புப் பேரனாரும், சுபா, சதயன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-1-1992 நண்பகல் 12-00 மணிக்கு அன்னாரது கந்தபூரண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
**க. வேலும்மயிலும்**
''கந்த பூரண இல்லம்'' [மருமகன்]
கோவில் வாசல்,
இணுவில் மேற்கு, சுன்னாகம். (19327)

## தொண்டா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் மகாநாயக்க தேரர் தொண்டமானின் அறிவிப்பை மறுத்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தொண்டமானின் யோசனைகள் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மல்வத்த பீடாதிபதி மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்.

தம்மைச் சம்பந்தப்படுத்தி தொண்டமான் அறிக்கை வெளியிட்டது பொறுப்பற்ற ஒரு செயல் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

[உ-எ-3]

## பூநகரியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அலுவலகத்துக்கு அருகிலுள்ள பொதுமக்களின் ஐந்து வீடுகள் நேற்று படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## லலித்,காமினி ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடியும்.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உத்தேச ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் லலித் அணியினரின் குடியுரிமையைப் பறிக்க முடியாது போனாலும்—

ஆணைக்குழு விசாரணையை பகிரங்கமாக நடத்துவதன் மூலம் லலித் குழுவினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முடியும் என்று அரசதரப்பில் கருதப்படுகிறதாம்.

நற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எதிராக 1979 ஆம் ஆண்டில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும்—

1980 ஆம் ஆண்டில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் அவரது குடியுரிமை ஏழு ஆண்டுகளுக்கு ரத்துச் செய்யப்பட்டிருந்ததும் தெரிந்தவையே. (உ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராஜக் குருக்கள் இராசலட்சுமியம்மா

நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்களின் அன்பு மனைவியும் தி. நடனசபாபதி சர்மா [இளைப்பாறிய யாழ். கச்சேரி அலுவலர்],தி. பாலசுப்பிரமணியக் குருக்கள் [அர்ச்சகர், மடாலயம், ஏழாலை, மேற்கு] க. காமாட்சியம்மா [மட்டக்களப்பு], ச. ஈஸ்வரியம்மா [யாழ்ப்பாணம்], ப. இராசாத்தியம்மா [கோப்பாய்] ஆகியோரின் அன்புத் தாயாருமாகிய திருமதி தி. இராசலட்சுமியம்மா 12-1-92 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-1-92 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் ஏழாலை மேற்கு தி. பாலசுப்பிரமணியக்குருக்களின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தி. பாலசுப்பிரமணியக் குருக்கள்**
[மகன்]
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். [19330]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 1 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கலைவண்ணம் மிளிரும் கவர்ச்சியான அச்சு வேலைகளைச் செய்வதற்கு விரும்புகிறீர்களா ?
தாமதியாது எங்களிடம் வாருங்கள்

★ நாவல்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நினைவு மலர்கள்
★ பில் புத்தகங்கள்
★ பரீட்சை வினாத்தாள்கள்

இன்னும் இவை போன்ற உங்கள் ஓடர்களை
உரிய நேரத்தில் சிறந்த முறையில் அச்சிட நாடுங்கள்

↓

உதயன்
292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் **தரத்திலும் விலையிலும் குறைந்த போலி** ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

**குறைந்த** விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு **தகுந்த சன்மானம்** அளிக்கப்படும்.

**ஆர். வி.ஜி நிர்வாகம்.**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(19273)

கொடிகாமம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

நியாய விலைக் கடை,
புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.

உங்களுக்குத் தேவையான-
சகல மனைப் பொருள்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள

நியாய விலைக் கடை,
கொடிகாமம்.

நெல், உபதானிய உணவுகள்
கொள்வனவு செய்ய விரும்புவோர்
எம்முடன் தொடர்பு கொள்க.

**நியாய விலைக் கடை,**
புகையிரத நிலைய முன்பு,
கொடிகாமம்.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்.

விளம்பர அமைப்பு:
[19314] **செனித் ஜோ. எகட்டன்.**

## நன்றி நவிலல்

### சபாபதிப்பிள்ளை முத்துக்குமாரு

கோவில் வீதி, நல்லூரைச் சேர்ந்த திரு. சபாபதிப்பிள்ளை முத்துக்குமாரு [இளைப்பாறிய ஒவசியர்] [10-01-92] வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் இராசம்மாவின் கணவரும், சபாபதிப்பிள்ளை [இளைப்பாறிய W. S.], Dr. தியாகேசபிள்ளை [அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்], ஆனந்தகுமாரன் [A. I.], திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா [இளைப்பாறிய ஆசிரியை] ஆகியோரின் தந்தையும், இரத்தினராசா, ராணி, ராதா, வனஜா ஆகியோரின் மாமனாரும், உருத்திரன், கவிதா, தூயவன், அன்பன், இன்பன், குமரன், கார்த்திகா, சங்கீதா, பாலகுமாரன் ஆகியோரின் பேரனுமாவார்,

அன்று நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

165/1, கோவில் வீதி,
நல்லூர். தகவல்:
**Dr. தியாகேசபிள்ளை**
[19324]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org